**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 85/2012** **Date:22.04.2026.**

**(PW1)- கணேசன்**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. பி.வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் காரணம் எதுவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்து விபரத்தில் கட்டிடம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், வாங்கும் சமயத்தில் கட்டிடம் கிடையாது. மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை தாக்கல் செய்தால் நான் குறிப்பிடும் மீன் வலை கம்பெனியும் கட்டிடமும் இல்லை என்ற விபரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி வரைபடத்தில் சர்வே எண் 254/1 ல் எனது சகோதரன் செல்லப்பன் மற்றும் ராஜேந்திரன் கண்டத்தை பிரிப்பதற்கும், ராஜேந்திரன் கண்டத்திலிருந்து எனது கண்டத்தை பிரிப்பதற்கு கிழமேலாக இரண்டு நேர் கோடுகள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நேர் கோடானது நான் பாதைக்கு விட்ட இடத்தை தாண்டி அடுத்த சொத்தின் எல்லையில் தொடுகிறது என்றால் சரிதான். மேலும் மேற்படி கோடு எனது ஒரு செண்ட் சொத்தின் தெற்கு ஓரத்தில் கிழக்கு எல்லையில் சென்று அடையும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணத்தில் ஜெயராஜனுக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற முன் ஆவணங்கள் பற்றி விபரங்களும் அது கிரயம் பெறும் நபரான 1ஆம் வாதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முன் ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் 1வது கண்டத்திற்கு 7 செண்ட் 300 சதுர லிங்ஸ் என்றும் 2 வது கண்டத்திற்கு 7 செண்ட் 700 சதுர லிங்ஸ் என்றும் ஆகமொத்தம் இரண்டு கண்டங்களையும் சேர்த்து 15 செண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் ஒரு செண்ட் பாதையானது சரிவாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. வரைபடத்தில் பாதை மட்டும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எல்லாமே தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் 420 சதுர லிங்ஸ் பரப்பளவு கொண்ட முக்கோண இடம் கழித்து விடப்பட்டு

மீதமுள்ள இடத்தில் பாதை அமைக்கப்பட்டுள்ளதாக துலங்குகிறது என்றால் சரியல்ல, மேற்படி வரைபடம் தவறாகும்.

4. செவ்வக வடிவில் இருந்த பாதையை சரிவாக காட்டுவதற்கு வேண்டி ஒரு செண்ட் பாதைக்கு உட்பட்ட 420 சதுர லிங்ஸ் இடத்தை விட்விட்டு பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சாஆ. 4 ஆவணம் மூலம் தான் நான் மற்றும் வாதிகள் சேர்ந்து மோசடியாக பாதையை விரிவுபடுத்தும் நோக்கதில் ஒரு வரைபடம் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 420 சதுர லிங்ஸ் இடத்தையும் சேர்த்து 15 செண்ட் இடம் உரிமையுள்ளதாக மோசடியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள வரைபடம் சரியானதா என்றால் சரியல்ல, தவறான வரைபடமாகும்.

5. பி.வா.சா.ஆ.4 வரைபடத்திற்கு முரனாக பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் சரியான வரைபடத்தை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் உள்ள வரைபடம் சரியானது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4,5, மற்றும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள முரண்பாடுகள் நீதிமன்றத்திற்கு தெரியக்கூடாது என்பதால் மேற்படி பி.வா.சா.ஆ.4,5 ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 மற்றும் 7 ஆகிய ஆவணங்களில் பாதையை வழிப்பாதையாகவும் மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு, தொலைபேசி இணைப்பு எடுப்பதற்கு பயன்படுத்துவற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியல்ல என்பதை தெரிந்து தான் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி பாதையில் வாகனங்கள் செல்வதற்கு அவகாசம் கொடுக்காதா காரணத்தினால் நான் பொய்யாக மேற்படி ஆவணத்தில் உள்ள பாதை சம்பந்தமான விபரம் பொய் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, பாதை விடப்பட்டதான் நோக்கம் கனரக வாகனங்கள் செல்வதற்காக ஆகும். நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களிலும் கனரக வாகனங்கள் செல்வதற்காக பாதை போடப்பட்டுள்ளது என்ற விபரம் துலங்காது என்றால் சரியல்ல, பாதையின் நோக்கம் கனரக வாகனம் செல்வதற்கு விடப்பட்டதாகும்.

7. நானும் மற்ற நபர்களும் பி பட்டிகை சொத்து வழியாக பாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. செல்லப்பன் கிரயம் கொடுத்த 1 செண்ட் நிலத்தைதான் பாதையாக பயன்படுத்தி அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் சென்று வருகிறோம் என்றால் சரிதான். பிரதிவாதி 19.03.2012 தேதியில் வழக்கு பி பட்டிகை சொத்தின் தன்மையை மாற்றி அமைத்து எல்கை சுவர் அமைக்க ஏத்தனித்ததாக

வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 08.03.2012 தேதியில் இரவு 9 மணி அளவில் 3, 4 வாதிகள் சேர்ந்து பிரதிவாதியின் சொத்தில் அத்துமீறி நுழைந்து முள்வேலிகளை அப்புறப்படுத்தி பாதையை விரிவுப்படுத்த முயற்சித்தார்கள் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக பிரதிவாதியால் 09.03.2012 தேதியில் குளச்சல் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி புகார் சம்பந்தமாக எங்களை விசாரிக்கவில்லை.

8. இவ்வழக்கு 28.03.2012 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலையில் வழக்கை தாக்கல் செய்துவிட்டு மதியம் 3.30 மணி அளவில் பிரதிவாதியின் எல்கை சுவரை இடித்து விட்டு 5.30 மணி அளவில் நீதிமன்ற ஆணையரை அழைத்து வந்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு காம்பவுண்ட் சுவர் இடித்ததால் என் மீதும் மற்ற வாதிகள் மீதும் குளச்சல் காவல் நிலையத்தில் புகார் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அது பொய் புகார் ஆகும். மேற்படி புகாரின் விசாரணை தொடர்பாக காவல் அதிகாரி ஸ்தலத்திற்கு வந்தபோது ஆணையரும் இடத்தை பார்வையிட வந்தார் என்றால் சரிதான். நான் காம்பவுண்ட் சுவரை இடித்ததாலும் முள்வேலியை சேதப்படுத்தியதாலும் பிரதிவாதிக்கு ரூ. 28000/- நஷ்டம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல, நாங்கள் இடிக்கவே இல்லை.

9. வழக்கு தாக்கல் செய்த பின்பு பிரதிவாதி பி பட்டிகை சொத்தின் தன்மையை மாற்றியதாக குறிப்பிட்டுள்ளதை நிரூபிப்பதற்கு புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ளார். நான் குறிப்பிடுவது போல் நீதிமன்ற ஆணையர் எந்த புகைப்படமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. நான் குறிப்பிடுவது போல் எந்த சம்பமும் நடைபெறவில்லை என்றாலும் அதை நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் JKCJ என்று குறிப்பிட்டுள்ளதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

10. என்னிடம் காட்டப்படும் இரண்டாவது நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் ABCHA என்று குறிப்பிட்டுள்ள பகுதி சரியானதா என்றால் சரியல்ல, ஒன்றாவது வரைபடத்தில் தான் சரியாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி இரண்டாவது வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் குறிப்பிட்ட நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் JKCJ என்ற பிரதிவாதி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து விரிவு படுத்திக்கொண்டு ABCHA என்ற முக்கோண பகுதியை விட்டுவிட்டு ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. JKCJ முக்கோண பகுதியில் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பே தேக்கு மற்றும் முந்திரி மரங்கள் இருந்தது என்றால் சரியல்ல, இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு பிரதிவாதியால் நடப்பட்டது ஆகும். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

11. மேற்படி மரத்தை அகற்றுவதற்கோ KCJB பகுதியில் உள்ள காம்பவுண்ட் சுவரை அகற்றகேட்பதற்கு எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது அண்ணன் எழுதிக்கொடுத்த வழிப்பதையில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகாளகிய நாங்கள் தான் பாதையை அகலப்படுத்தவேண்டி பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததுடன் பி பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் இடம் விட்டுள்ளார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள பி பட்டிகை சொத்து எனது அண்ணன் கிரயம் கொடுத்த ஒரு செண்ட் சொத்து மற்றும் பிரதிவாதியின் சொத்தை சேர்த்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

12. எனது அண்ணன் எழுதிக்கொடுத்த ஒரு செண்ட் சொத்தை தவிர்த்து அதே புல எண்ணில் வேறு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதி கட்டியுள்ள காம்பவுண்ட் சுவரை அவரது சொத்தில் தான் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பி பட்டிகை சொத்தில் பிரதிவாதியின் சொத்தும் அடங்கியிருப்பதால் சொத்தின் உரிமையாளரான பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரமோ செயலுறுத்து கட்டளை பரிகாரமோ கோர முடியாது என்றால் சரியல்ல, அவர் ஆக்கிரமித்து கட்டியுள்ளதால் நான் கோரலாம். வழக்கு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு ஸ்தலத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். எதிர் கோருரிமை மனுவுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் ABCDE கோடுயானது தெற்கு மற்றும் கிழக்கு பக்கத்தில் செல்லப்பன் பைப்பால் முள்வேலி போட்டு இருப்பதாக கூறுவது பொய் என்று உண்மைக்கு புறம்பாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

13. மேற்படி முள்வேலியானது 18 ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்டது என்றாலும் அது 08.03.2012 ல் 3, 4 வாதிகளால் அப்புறப்படுத்தப்பட்டது என்றாலும் அவ்வாறு அகற்றப்பட்ட இடத்தில் 28.03.2012 நாளன வழக்கு தாக்கல் செய்த தேதிக்கு முன்னரே காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டிருந்த விபரத்தையும் அதனை வழக்கில் தாக்கல் செய்துவிட்டு அன்றைய தினமே இடித்து விட்டோம் என்றால் சரியல்ல, மேற்படி இடத்தில் முள்வேலி கிடையாது, காம்பவுண்ட் சுவர் வழக்கிற்கு பின்பு கட்டப்பட்டதாகும். வழக்கிற்கு பின்பு காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை சுவதீணப்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் நான் கோரியுள்ள செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் நியாயமான முறையில் தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் கள்ளத்தனமாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது காம்பவுண்ட் சுவரை அவர்களே இடித்து விட்டார்கள் என்று வழக்றிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை முடித்து வைக்கப்பட்டதற்கான எந்த அறிவிப்பும் பிரதிவாதிக்கு அனுப்பப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏதிர்கோருரிமையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் உண்மையானது என்றால் சரியல்ல. மேற்படி வரைபடத்தில் BCD என்ற குறிப்பிடும் கண்டம் ஸ்தலத்தில் இல்லை என்று குறிப்பிடுவது பொய் என்றாலும் மேற்படி இடத்தை தான் நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எதிர்கோருரிமையில் கேட்டுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

15. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11,12 பட்டா மற்றும் தீர்வை ரசீது எனது கண்டமான சர்வே எண் 254/1பி உரியது என்றால் சரிதான். சர்வே எண் 254/1ஏ சொத்து அனுபவத்தில் உள்ளதை காட்டகூடிய எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான், மேற்படி சொத்தில் எங்களுக்கு உரிமை கிடையாது. சர்வே எண் 254/4,5ஏ, 1ஏ ஆகிய சொத்துக்களில் வாதிகளாகிய எங்களுக்கு உரிமை இருப்பதை காட்டகூடிய பட்டா அல்லது தீர்வை எதுவும் இல்லை என்றால் சரிதான், போக்குவரவு செய்தவற்கு உரிமை உண்டு.. நான் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டி பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**